1981 மார்ச் 6]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : போராட்டக் காலத்திலே போராடியவர்களை அழைத்துப் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இது சம்பந்தமாக உறுதிமொழி தந்தார்கள். நான்கூட இதுபற்றி இந்த அவையில் பேசியிருக்கிறேன். அன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இருந்தார்கள். ஆகவே, இந்நிலையில் அரசே பேச்சுவார்த்தைக்கு உரியவர்களை உடனே அழைத்துப் பேசி உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி கலந்து பேசி தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

Motor Car Allowance.

* 70 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) the rate of Motor Car Allowance that is paid to Government Servants, who go on official tours in their own motor cars;

(*b*) the date on which this rate was fixed;

(*c*) whether, in view of the increased cost of petrol, tyres, battery, etc., there is any proposal to raise he same; and

(*d*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மோட்டார் காருக்கென் றளிக்கப்படுகிற தற்போதைய பயணத் தொலைவுப்படி விதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

முதல் 100 கிலோ மீட்டருக்கு—கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு.

அடுத்த 100 கிலோ மீட்டருக்கு—கிலோ மீட்டருக்கு 90 காசு.

எஞ்சிய தொலைவுக்கு—கிலோ மீட்டருக்கு 85 காசு.

மாற்றல் காரணமாக பயணங்களுக்கு, தமிழ்நாடு பயணப்படி விதிகளைச் சேர்ந்த 72 (1) ( ) (2) விதியின்கீழ் அனுமதிக்கத்தக்க பயணத் தொலைவுப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. நிலை I —கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு.
2. நிலை II —கிலோ மீட்டருக்கு 70 காசு.
3. நிலை III
4. நிலை IV—கிலோ மீட்டருக்கு 55 காசு.

(இ) 14—10—1980.

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

(உ) பெட்ரோல், மச்சுக்கெண்ணெய் முதலியவற்றின் விலை அண்மையில் உயர்ந்துள்ளது. அதைக் கருத்திற்கொண்டு, படியை மேற்கண்டவாறு உயர்த்தி, நிதித்துறையின் (படிகள்-1), 14—10—1980 ஆம் நாளிட்ட 962 ஆம் எண் அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(எ) மேலே (இ) பகுதியிலே விடை கொடுக்கப்பட்டுள்ளதால், இவ் வினா எழாது.

THIRU A. R. DAMODARAN: Sir, in 1971, there was a Government Order authorising an imprest amount of Rs. 50 for purchase of petrol by these officers. But, since 1971 there has been no increase. In view of the increase in the price of petrol from Rs. 1.60 per litre to Rs. 5.40 may I know whether the Government have any proposal to increase the imprest amount given to officers for purchase of pettlo when they go on tour.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாக அதுபற்றிய விவரம் அளிக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: முதல் 100 கிலோ மீட்டருக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு என்றும், அடுத்த 100 கிலோ மீட்டருக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு 90 காசு என்றும், எஞ்சிய தொலைவுக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு 85 காசு என்றும் இருக்கிறது. இப்படி முதலில் அதிகமாகக் கொடுத்து விட்டு, அடுத்த கட்டணத்தைக் குறைத்துக் கொண்டே போவதைக் காட்டிலும் ஒரே அளவில் இதை அரசு ஊழியர்கள் பெற்றுக்கொள்வதற்கு ஏது வாக அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டருக்கு மேல் செல்கின்றவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும். உறுப்பினர் சொல்வது மாதிரி வைத்தால், செலவு மிக அதிகமாக இருக்கும் என்பதால், அதிகாரிகளை எல்லாம் கலந்து பேசித்தான் இப்பொழுது முறையே மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் என்றால் 55 காசு, 45 காசு, 40 காசு என்றும்

மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் என்றால் 55 காசு, 45 காசு 40 காசு என்றும்

நிர்ணயித்துள்ளோம்.

1981 மார்ச் 6]

குளச்சல் படகு சங்கங்களிலிருந்து வேலை நீக்கம் பெற்றவர்கள்

@ * 71 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசினுடைய ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மீன்துறையைச் சார்ந்த, கன்னியாகுமரி மாவட்ட குளச்சல் படகு சங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில் எத்தனை பேர் 1—10—1980 நாளன்றுள்ளபடி வேலையின்றி இருக்கிறார்கள் ?

(இ) அவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) எழுபத்தேழு நபர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்.

(இ) ஆம்.

(உ) அரசுக்கு வந்த முறையீடு தக்க நடவடிக்கைக்காக மீன் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முறையீட்டில் தங்களுக்கு மீன் துறையிலோ அல்லது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திலோ வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தார்கள். இக்கோரிக்கை ஏற்க இயலாதது என மீன் துறை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்து விட்டார். எனினும், குளச்சல் படகு கட்டும் கூட்டுறவு சங்கத்தில், ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடனும் படகுகள் கட்ட உத்தரவுகள் பெற்று சில நபர்களுக்காவது வேலை வாய்ப்பு அளிக்க இயலுமா என்று ஆராயப்பட்டு வருகிறது. நாகர் கோயில் மீன்துறை உதவி இயக்குனர் இதுபற்றி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ம. சங்கரலிங்கம் : ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கிற மத்திய அரசுத் திட்டத்தின் கீழ்தான் இவர்கள் அன்றைக்கு நியமிக்கப் பட்டார்கள். ஐந்து ஆண்டு நிதி உதவியை மத்திய அரசு கொடுக்கிறது. ஐந்து ஆண்டுகள் முடிந்த பிறகுகூட, மாநில அரசு தான் அவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலையை விட்டுப் போகச் சொல்லாமல், தொடர்ந்து வேலையை நீட்டித்துக் கொடுக்க வேண்டும். வேலையிலிருந்து அவர்களை நீக்கக்கூடாது என்பது மாநில அரசுக்குள்ள பொறுப்பு. அதை ஒத்துக்கொண்டுதான் மாநில அரசும் உத்தரவு அன்றைக்கு

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.